# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் பத்திரிகை செய்தி – 04.02.2021

தமிழ்நாடு மின்வாரியத்தில் வாரிய தலைவராக பதவியேற்றுள்ள திரு.பங்கஜ்குமார் பன்சால், இ.ஆ.ப அவர்கள் துணை மின் நிலையங்களையும் இதர பகிர்மான பணிகளையும் (இயக்கமும் பராமரிப்பும்) தனியாருக்கு அவுட்சோர்சிங் முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். மேலும் தொழிற்சங்கங்களை சந்திக்கவும் மறுத்து வந்தார்.

தொழிற்சங்கங்களின் வற்புறுத்தலின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்து பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்து வந்தார். இந்நிலையில் தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக கடந்த 21.12.2020 அன்று காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தலையீடு செய்ததின் பேரில் அவுட்சோர்சிங் உத்தரவுகளை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்ய கூடாது என்றும், பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் உரிமையை ஏன் ரத்து செய்யக் கூடாது என்றும் காரணம் கேட்டு தொழிற்சங்கங்களுக்கு வாரிய நிர்வாகம் விளக்க கேட்பாணை 03.02.2021 அன்று வழங்கியுள்ளது. இவ்விஷயம் குறித்து கடந்த 02.02.2021 அன்றே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டிய பொழுது விளக்கக் கேட்பாணை வழங்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார். ஆனால் அமைச்சரின் வாக்குறுதியை மீறி மின்வாரிய நிர்வாகம் தொழிற்சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

பின்னர் மீண்டும் அமைச்சர் தலையீட்டின் பேரில் ரத்து செய்ய பட்டாலும், தொழிற்சங்கங்களை அவமதிக்கும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதை வன்மையாக கண்டிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மேலும் தொடர்ந்து மின்பணியாளர்களுக்கு எதிராகவும் தமிழக அரசிற்கு அவப்பெயரை உருவாக்கிடும் வகையிலும் செயல்பட்டுவரும் மின்வாரியத் தலைவரையும், இனை மேலாண்மை இயக்குனரையும் இடமாற்றம் செய்திட கோரி வருகிற 08.02.2021 அன்று கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி **தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரிவு அலுவலங்கள் முன்பு காலையிலும் , செயற்பொறியாளர் அலுவலகங்கள் முன்பு மதிய உணவு இடைவேளையிலும், மாலையில் அனைத்து வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம் என்பதை தெரிவித்து கொள்கிறோம் .**

மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை